வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# விவசாயம் மின்னிதழில் வேளாண்மைப் பதிவுகள்

**முனைவர் ஜா.ஸ்டெல்லா மேரி,** உதவிப்பேராசிரியை, தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி– 620 002

**கணினி கலைச் சொற்கள்**

இணையம் - Internet

மின்னிதழ் - E- Journal

வேளாண்மை–Agriculture

முகப்பு–Home

எண்ணிமம் –PDF

வையக விரிவு வலை–www - world wide web

காணொளி–you tube

புகைப்படம் –Photo

உள்ளீடு–Input

பதிவேற்றம் –upload

**முன்னுரை**

இறைவனின் படைப்பில் சிறப்பாகப் போற்றப்படுபவன் மனிதன். பண்டைய காலத்தில் மனிதன் சிந்திக்கத்தொடங்கியதன் முயற்சி தான் இன்று அறிவியலில் அவன் அடைந்துள்ள பல மாற்றங்கள். சங்க காலத்தில் விவசாயம் என்பது தமிழர்களிடையே தழைத்தோங்கியது என்பதற்குச் சான்றாக

சங்க இலக்கியப்பதிவுகளை ஆராயமுடிகின்றது.மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கு இணையாக விவசாயத்துறையில் பல மாற்றங்கள் எழுந்துள்ளன. விவசாயம் என்றால் என்ன? இனி எவ்வாறு இயற்கை முறையில் விவசாயம் செய்வது என்ற சிந்தனையில் மனிதன் சிந்தித்துக்கொண்டிருக்கின்ற இக்காலக்கட்டத்தில் வேளாண்மைக்குறித்துப் பல தகவல்கள் இணையத்தில் வலம்வந்துகொண்டிருக்கின்றன.www.vivasayam, www.agrisakthiஎன்ற இரு மின்னிதழில் பதிவு செய்யபட்டுள்ள வேளாண்மைக் குறித்த தகவல்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**மின்னிதழ் விளக்கம்**


அச்சில் வெளிவராது இணையத்தில் பதிவேற்றம் பெற்று, இணையம் வாயிலாக வெளிவருகின்ற இதழ்கள் அனைத்துமே இணைய இதழ்கள் அல்லது மின்னிதழ்கள் E- Journalஎன்று அழைக்கப்படுகின்றன.

**மின்னிதழ் வகை**

மின்னிதழ் என்றவகைப்பாட்டில் மூன்றுவகையான அமைப்புமுறையினைக் குறிப்பிடுகின்றனர்.

1. அச்சில் மட்டும் வெளிவருகின்ற இதழ்கள்
2. அச்சிலும், இணையத்திலும் வெளிவருகின்ற இதழ்கள்
3. எண்ணிம வடிவில் வெளிவருகின்ற(PDF)இதழ்கள்

**விவசாயம் மின்னிதழ் (www.vivasayam)**




விவசாயம் என்ற இம்மின்னிதழ் 2018ஆம் ஆண்டு காப்புரிமை பெற்று தொடர்ந்து இணையத்தில் வலம்வந்துகொண்டிருக்கின்றது.இம்மின்னிதழின் ஆசிரியர் திரு.செல்வமுரளி ஆவார். விவசாயம் என்ற இம்மின்னிதழின்

நோக்கமே அழிந்துவருகின்ற நம் இயற்கை விவசாயத்தை மீட்டெடுப்பதே என்பதை உணர்த்தும் விதமாக ஒவ்வொரு பதிவுகளையும் அறியமுடிகின்றது.

**முகப்பு(Home)**

முகப்புப்பக்கத்தில் **விவசாயம்** என்ற பெயருக்கு அருகாமையில் ஒரு உழவனின் கையில் ஒரு செடியை கையேந்திய புகைப்படம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இம்மின்னிதழின் பெயரை இப்படம் குறிப்பால் உணர்த்துகின்றது.இம்மின்னிதழின் கட்டமைப்பாகHome,கொரோனா குறிப்புகள், மின்னிதழ், செய்திகள், விவசாயக் கட்டுரைகள், இயற்கை விவசாயம், மாடிவீட்டுத்தோட்டம், மானியங்கள், கருத்துக்களம், தொடர், மருத்துவகுணங்கள், தினம் ஒரு தகவல் என்ற தளங்களை உள்ளடக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இம்மின்னிதழ் **'அக்ரி சக்தி'** என்ற பெயரில் மின்னிதழாக தனிச்சுற்றுப்பிரதியாக ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை வார இதழாக வெளிவருகின்றது. இவற்றில் www.vivasayam.org/tag, www.agrisakthi.com, contact.9940764680 என்று தன்னைப் பற்றிய ஒரு அறிமுகத்தை வழங்கியுள்ளனர். மேலும் இதுவரையிலும் *39* இதழ்கள் வெளிவந்துள்ளதைப் பதிவேற்றம் செய்துள்ளனர்.

**கொரோனா குறிப்புகள்**

இத்தளத்தில் கொரோனா நோய் தொற்று, அறிகுறிகள் அபாயகட்டத்தை எட்டுவதை எவ்வாறு அறிவது, இருமல் ஏற்பட்டால் நாம் ஏன் முகத்தை மூட வேண்டும், கொரோனா பற்றி மருத்துவர்களின் கருத்துகள் என கொரோனா செய்திகளும் அதன் விளக்கங்களும் இத்தளத்தில் இடம்பெற்றுள்ளன. கொரோனா நோயைக் கட்டுப்படுத்தும் இயற்கை மூலிகைகள் என்னென்ன உள்ளன,அவற்றின் பயன் யாது? மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் கொரோனா பாதிப்பு ஏற்பட்ட நபரின் விளைவுகள் ஆகிய விளக்கங்களைத் தகவல்களாக அறியமுடிகின்றது. ஆனால் இந்தத் தளத்திற்குள் செல்லவேண்டுமென்றால் ஒரு சில இணைய விதிமுறைகளைக் கையாண்டபின்புதான் இத்தளம் திறக்கப்படுகின்றது.


**மின்னிதழ்**

‘அக்ரிசக்தி’www.agrisakthi.comஎன்ற பெயரில் மின்னிதழ்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு வாரமும் வேளாண்மை குறித்த பல தகவல்களைக் கொண்ட தனிச்சுற்று இதழ்கள் ஆகும். அக்ரிசக்தியில் இதுவரை 66 இதழ்கள்பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு இதழ்களும் புதியப் புதிய தலைப்புகளில் அமைந்துள்ளன. சான்றாக 22.01.2021ல் ‘**விளைச்சலை அள்ளித் தெளிக்கும் டிரோன்கள்’** என்ற தலைப்பில் விவசாயத்தை எண்ணியல் (டிஜிட்டல்) முறையில் எவ்வாறு செய்வது என்பதற்கான ஒரு கண்ணோட்டத்தை இவ்விதழில் பதிவுசெய்துள்ளனர்.

1. நவீன இயந்திரங்கள் வாயிலாக பயறு வகைகள் சாகுபடி செய்யும் முறை
2. முட்டைக்கோஸில் கரி அழுகல் நோயும் அதனைக் கட்டுப்படுத்தும் முறை
3. சாமை சாகுபடியில் தொழில் நுட்பங்கள்
4. எண்ணியல் விவசாயம் பற்றிய கருத்துகள் உள்ளடக்கிய தகவல்கள் உள்ளன.

ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் தங்களின் படைப்புகளை வழங்குவதற்கானக் குறிப்புகளையும், படைப்பாளர்களின் படைப்புகள் தங்களின் சொந்தநடையில் அமைவதையும். படைப்புகளை மின்அஞ்சல் வாயிலாக அனுப்புமாறும் அறிவுறுத்துகின்றனர்.

**செய்திகள்**




செய்திகள் என்ற இத்தளத்தில் நானூற்றித்தொண்ணூற்றி ஏழு தலைப்புகளில் தகவல்கள் உள்ளன.‘**விரல்நுனியில் விவசாயத் தகவல்**’ என்ற பெயரில் இங்குசெய்திகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.**சரியும் விவசாயத்தினை சரியாக்க என்ன வழி?** என்பது போன்ற சிந்தனைப் பதிவுகள் குறித்தத் தலைப்புகளாவன :

1. 2020 இந்திய பட்ஜெட்டில் விவசாயத்துறைக்கு 2.83 லட்சம் கோடி ஒதுக்கீடு
2. பொருளாதாரக் கணக்கெடுப்பு 2019-2020 விவசாயத்துறை பற்றிய ஒரு பார்வை
3. மஞ்சளை மதிப்புக்கூட்டுப் பொருளாக்கி விற்க ஈரோடு மாவட்ட ஆட்சியர் விவசாயிகளுக்குயோசனை
4. 12-ம் நூற்றாண்டில் இருந்த நெல்லின் வகைகள்.
5. பூச்சிக்கொல்லிகளின் வகைகள.
6. கம்பு பயிரில் கரிப்பூட்டை நோயும் அதன் மேலாண்மை முறைகளும்

எனப் பலவகையான வேளாண் பதிவுகள் இத்தளத்தில் உள்ளன.

உதாரணமாக :

**12-ஆம் நூற்றாண்டில் இருந்த நெல்வகைகள்**என்ற தலைப்பில், நவம்பர் 8, 2019ல் வெளிவந்தவை. இச்செய்தியை வழங்கியவர் சங்கர நாராயணன், வரலாற்று ஆய்வாளர் ஆவார்

மேலைச் சாளுக்ய மன்னன் மூன்றாம் சோமேசுவரன் விக்ரம சோழனுக்குச் சமகாலத்தவன். பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன். பல்கலை வித்தகன். அவன் எழுதிய ஒரு நூல் கலைக்களஞ்சியமாகப் போற்றப்பெறுகிறது. கர்நாடக இசை, கட்டடக்கலை, தாவரவியல், விலங்கியல், விலங்கு மருத்துவம், அரசியல், நிர்வாகம் ஆகியவற்றிற்கு மிகச் சிறந்த நூலாக இதைச் சொல்லலாம். தொள்ளாயிரம் வருடங்களுக்கு முன்பாக எழுதப்பெற்ற இந்த நூலில் எட்டுவகையான நெற்பயிர்கள் குறிப்பிடப்பெற்றிருக்கின்றன. அவையாவன1.மஹாசாலி,2. ரக்த சாலி,3. ஸ்தூல சாலி,. 4.ஸுக்'ம சாலி5. கந்த சாலி சாலி 6. கலிங்க சாலி, 7.'ர்'டிக சாலி என்பனவாகும். நெல்வேலியைச் சாலிவாடி என்று வடமொழியில் குறிப்பர்.இவற்றுள் மஹாசாலி என்பது பெரிய அளவிலான நெல். ரக்த சாலி என்பது சிவப்பு நெல். ஸ்தூல சாலி என்பது பெருநெல். ஸுக்'ம சாலி என்பது மிகவும் குறுகிய நெல். கந்த சாலி என்பது நல்ல மணமுள்ள நெல். கலிங்க சாலி என்பது கலிங்கநாட்டில் விளையும் நெல். 'ர்'டிக சாலி என்பது அறுபது நாட்களில் அறுவடைக்காகும் நெல். இதைத்தான் குறுவைநெல் எனத் தமிழில் வழங்குகிறோம். முண்டசாலி என்பது மெல்லிய உமியுடைய நெல் என்று நெல் வகைகுறித்த தகவல்களை வழங்கியுள்ளார்.இது போன்று பல அரியக்

கருத்துக்களை உள்ளடக்கிய தகவல்கள் இங்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**விவசாயக்கவிதைகள்**

விவசாயக் கட்டுரைகள் என்ற இத்தளத்தில் இருநூற்று எண்பத்தைந்து கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் விவசாயத்தையும் அதனோடு தொடர்புடையக் கருத்துக்களையும் உள்ளடக்கியப் பதிவுகளாக அமைகின்றன. குறிப்பாக வேளாண் துறையைச் சேர்ந்த ஆய்வாளர்களின் கட்டுரைகளே இத்தளத்தில் மிகுதியாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் இடம்பெற்ற கவிதையானதுநவம்பர் 12.2020 -ல் வெளிவந்த சேலம் சட்டூரைச் சேர்ந்த வேளாண்மைப் பட்டதாரியான சங்கரநாராயணன் என்பவரால் எழுதப்பெற்றது.

**உன்னத உழவனும் உழவும்**

உலகம் உன்னதமான உயிரோட்டமான உருண்டையானது.

உயிரோட்டமான உலகில் உடலை உழைத்து,

உயிரை உருக்கி உழுபவன் உழவன்

உழவன் உழவில்லையெனில் உணவில்லை உலகில்

உணவில்லா உலகில் உயிர் உள்ள உயிர்களெல்லாம்,

உடலில் ஊற்றென உதித்த உதிரம் உதிர்த்து

உணவு உட்கொள்ளும் உபத்திரம் உருவாகும் உலகில்!

உழவனை உயர்த்தி உயிர்களுக்கு உயிர் ஊட்டுவோம்


உலகில் உயர்ந்தது உழவனும் உழவுமென

உலகிற்கு உணர்த்தி உயர்த்துவோம்.

உழவனின் செயல்குறித்து இக்கவிதையின் வாயிலாக அறியமுடிகிறது.

**விவசாயக் கட்டுரைகள்**

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உழவியல் துறை முனைவர் பட்ட மாணவர்களான ரா.கவிதா மற்றும் கோ.சீனிவாசன் பயிர் உற்பத்தியில் மண் வெப்பநிலை மற்றும் அதன் முக்கியத்தும் குறித்து மே:29,2020ல் வெளியிட்டுள்ளக் கட்டுரை தரப்பட்டுள்ளது.




மண்ணின் வெப்பநிலையைப் பாதிக்கும் காரணிகள், மண் சரிவு, உழவு, மண்ணின் தன்மை, மண்ணின் ஈரப்பதம் பற்றியத் தகவல்கள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. மேலும்

1. நஞ்சில்லா வேளாண்மை முறையில் மாம்பழ ஈ-யைக் கட்டுப்படுத்தும் வழிகள் (செப் -11, 2018)
2. பாசுமதி அரிசி உற்பத்தியில் பூச்சிக் கொல்லி பயன்படுத்துவதைக் குறைக்கத்திட்டம் (செப்:6, 2018)
3. உடலுக்குப் பலம் சேர்க்கும் பொன்னாங்கன்னி (பிப்ர:19,2020)
4. பூச்சி விரட்டி வசம்பு (மே.20,2017)போன்ற பயனுள்ள தலைப்புகளில் மக்களுக்குத் தெரியாத தகவல்களை உள்ளடக்கிய கட்டுரைகள் இங்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**இயற்கை விவசாயம்**

இன்றைய விவசாயங்கள் அனைத்துமே செயற்கை முறையில் நவீனமயமாக்கல் என்ற நிலைக்கு நம்மை வழிநடத்திச்சென்றுகொண்டிருக்கின்றது. ஆனால் விவசாயம் என்ற இம்மின்னிதழில் அழிந்துகொண்டிருக்கின்ற விவசாயத்தை மீண்டும் எவ்வாறு

இயற்கைவழியில் மேற்கொள்ளலாம் என்று நூற்றி இருபத்திமூன்று தலைப்புகளில் தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் கண்டறியமுடிகின்றது.

1. இயற்கைமுறையில் தக்காளி சாகுபடி செய்யும் முறை
2. நஞ்சில்லா வேளாண்மை முறையில் மிளகு வாடல் நோய் மேலாண்மை
3. நிலக்கடலைத் தண்டழுகல் நோய்
4. பயிர் வளர்க்க கடல் நீர் ஊக்கி
5. மாஞ்செடி பதியம் போடும் முறை
6. இலாபம் தரும் வேளாண்மை நுணுக்கங்கள் மற்றும் ஊடுபயிர் சாகுபடி பற்றி அறிந்து கொள்ளுங்கள்
7. கோடை உழவு, கோடி நன்மை பொன் ஏர் கட்டுதல் என்ற தலைப்புகளை உள்ளடக்கியத்தகவல்கள் இத்தளத்தில் இடம் பெற்றுள்ளன.

**மாடிவீட்டுத் தோட்டம்**

மாடிவீட்டின் மீது எவ்வாறு விவசாயம் செய்வது, அதற்கான முறைகள் என்ன, தொட்டிகளில் ரோஜா வளர்க்கும் முறை, கீரை, கொத்தமல்லி, புதினா, பூச்செடிகள் எவ்வாறு வளர்ப்பது, அதற்கான பூச்சிகொல்லி உரங்கள் தயாரிப்பது, மகசூல் அதிகரித்தல் என்பது குறித்த தகவல்கள் இத்தளத்தில் இடம்பெற்றுள்ளன.

**மானியம்**

இத்தளத்தில் அரசின் சலுகைகள், அரசு அறிவிக்கும் நிதி உதவிகள், மானியங்கள், விவசாயக்கடன் தள்ளுபடி, சிறுதொழில் குறித்த உதவித்தொகைகள் பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.

**கருத்துக்களம்**

ஒவ்வொரு விவசாய மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு விவசாயிகளின் தேவைகளைக் கருத்துகளாகச் சேகரித்து அவற்றை இத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளனர். விவசாயிகளுக்கும்

இச்சமூகத்திற்க்குமான தொடர்பு, அரசுக்கும் மக்களுக்குமான நிலைகுறித்த தகவல்கள் இங்கு பதியப்பட்டுள்ளன.

1.கஜாபுயல் அடுத்து செய்யவேண்டியது என்ன?

2. கவுதாரிவளர்ப்பவர்களுக்கு நிதி உதவி

3. பருவநிலை மாற்றத்தால் காய்கறிகள் உற்பத்தி குறையும் அபாயம்!

4. பிரதம மந்திரி ‘பசல்பீமா யோகனா பயிர் காப்பீட்டுத்திட்டம்’ பற்றிய தகவல்

5. குறைந்துவரும் நெல்சாகுபடி,தண்ணீர் தர மறுக்கும் மாநிலங்களிடம் நெல்லுக்கு கையேந்தும் அவலங்கள் குறித்த தகவல்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.

**மருத்துவ குணங்கள்**

நம்நாட்டில் உள்ள ஒவ்வொரு மரம், செடி, கொடிகளுக்கும் ஒரு மருத்துவ குணம் உண்டு என்பதை இங்குள்ள இயற்கைப்பதிவுகளைக்கண்டு அறிந்துகொள்ளமுடிகிறது. மன உலைச்சலைப் போக்கும் ஜாதிக்காய், அவரைச் சாற்றில் தோல் சம்பந்தப்பட்ட நோய் குணமாகுதல், சளித்தொல்லைக்கு தும்பைப்பூச் சாறு, கருப்பைக்கோளாறுக்கு பூளைப்பூச் சாறு என்று பல மருத்துவத் தகவல்கள் இங்கு இடம்பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

இயற்கையில் விவசாயம் என்பது சிறந்த கலையாக இருந்துள்ளது. மனிதன் தன் தேவையை நிறைவுசெய்ய விவசாயத்தைத் தொடங்கினாலும் தொடர்ந்து அதுவே அவனின் வாழ்வாதாரமாக இருந்துள்ளது. சங்ககால மனிதர்கள் பஞ்சபூதங்களைத் தெய்வமாகப் போற்றியுள்ளனர். இயற்கையோடு ஒன்றித்து தன் வாழ்க்கையை நடத்தினர். நவீனமயமாக்கல் என்ற நிலையில் நமது இயற்கை விவசாயத்தை விட்டுவிட்டு செயற்கைக்குச் சென்றதன் பின்விளைவுகள் நம் நாட்டில் பல உள்ளன. இயற்கை விவசாயத்தைமீண்டும் எவ்வாறு தொடர்வது என்ற கவலை மனிதனிடத்தில் ஏற்பட்டுள்ளது. விவசாயம் செய்வது எப்படி, நிலத்தை எவ்வாறு உழவு செய்யவேண்டும், என்ன உரம்

நிலத்திற்கு இடவேண்டும் என்பது போன்ற கேள்விகள் இளையத் தலைமுறையினரிடையே எழுகின்றன. இவர்களின் ஐயங்களை நீக்கும் விதமாக ‘விவசாயம’ என்ற மின்னிதழ் அமைந்துள்ளது.

**இயற்கையைப் பாதுகாப்போம்!விவசாயத்தை மதிப்போம்!!**

**துணைநின்ற இணையதளங்கள்**

1. **www.vivasayam.org**
2. **www.agrisakthi.com**
3. **www.vivasayam/category/**செய்திகள்
4. **www.vivasayam/**மண்உற்பத்தி
5. **www.vivasayam/minnithal**
6. **www.vivasayam/category/**கட்டுரை